உ

முருகன் துணை.

திருப்போரூர்

சுப்பிரமணியர்

வருகைப்பத்து.

எஸ். பி. இராஜாராம் அவர்களது

சென்னை சூளை,

ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1923.

சந்திரகாந்தா கூந்தல்வளரும் பரிமளத்தைலம்.

இத்தைலம் சிறந்த வனமூலிகைகளினுல் சாஸ்திர முறைப்படி தயார்செய்யப்பட்டது. சிறந்த வாசனையும் கூந்தலை நீளமாக வளரச் செய்யும் மண்டைகுத்தல், மூளை கொதிப்பு, தலைபாரம், சிரரோசம், கண்களில் நீர்வடிதல், மயக்கம் கண்ணெரிச்சல் முதலிய வியாதிகளை அடியோடு நிவர்த்தியாக்கி சரீரத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். டின் 1-க்கு ரூபா 1 0 0

தந்தப்பொடி.

இது பல்நோய், கூச்சல், பல்லசைவு, ஈறுகரைதல், ரத்தமுண்டாதல் முதலியவைகளை நீக்கி ஈரைக் கெட்டிப்படுத்தி பற்களை யிறுக்கி சகல துன்பத்தையும் ஓட்டி விடும். டப்பி 1-க்கு அணா 4. 10 டப்பி ரூபா 2,

எமது கப்பெனி பெரிய கேட்லாக் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்."

எஸ். பி. இராஜாராம், கம்பெனி,

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

உ

முருகன்துணை.

திருப்போரூர்.

சுப்பிரமணியர்

வருகைப்பத்து.

பொன்னே வருக நால்வேதப் பொருளேவருக
அருளுதவும் - புனிதா வருக இனிதாமைப் புயலே
வருக புயற்குள்நின்ற, மின்னே வருக மெய்ஞ்ஞான
விளக்கே வருக நினைத்தவர்வல் - வினைதீர்த் தருளி
யெனையாளும் விமலா வருக கமலைபுகழ், அன்னோர்
கூந்தற் கன்னிவள்ளிக் கன்பா வருக வும்பருக்கும்-
அரசேவருக மூலமென வத்தியழைக்கமுத்திதர,முன்
னேகியமால் மருகனெங்கள் மூர்த்தி வருக வருக
வே-முதல்வா சமர புரிவாழும் முருகா வருக வரு
கவே. (க)

வேலா சீலா வருகமுத்தி வித்தே சித்தே வருக சதுர்-வேதா நீதா வருகமயில் வீரா சூராவருகவனு, கூலா மேலா வருகபரங் குன்ருள் கின்ருய் வருகம றைக்-கொழுந்தே செழுந்தேன் கடம்பணிந்த கோ வே தேவே தருக விந்த்ர, ஜாலா லோலா வருக சடாட் சரனே பரனே வருகமிறை-தவமே சிவமே வருக சம்ப்ர தாயா நேயா வருக மந்த்ர,மூலா பாலா ஞானசிவ மூர்த்தி வருக வருகவே - முதல்வா சமர புரிவாழும் முருகா வருக வருகவே. (உ)

பாகா மழலை மொழிக்குறப் பெண்பாகா வருக கதிர்வடிவேற்-படையாய் வருக வெளையினிமேற் ப டையாய் வருக அடியவர்கள், வாகா வெனவே வண் ணமயில் வாகா வருக கூர்கொள்வடி-வாளாம் விழித் தெய் வானைமண வாளா வருக மிகநாக, ரீகா வருக பாதபுண்ட ரீகா வருக வமுதருன்சந்-நிதியே இறை ஞ்சித் துதிசெய்தயா நிதியே வருக தமிழ்க்கதிக மோகாவென்ற னுளத்திலதி மோகா வருகவருகவே-முதல்வா சமரபுரிவாழும் முருகா வருக வருகவே. ()

நித்தந்துதிக்கும் பழவடியார் நெஞ்சத் திடராம் பஞ்சினுக்கோர்-நெருப்பே வருக பொருப்பனைத்து ம் நின்றாய் வருக குன்றூத, சத்தம் பரிசம் ரூபரசந் தந்த கெந்த மைந்தினுக்குஞ்-சடத்துமண்டத் திடத் தமர்ந்த தலைவா வருக குரவையிட்டு, வித்தும் பழ னஞ்-செந்நெலுக்கு விரைத்தேன் பாச்சு மள்ளர்கள் நெல்-விலைக்குச் சூற்கொள் சங்கீன்ற வெள்ளி யனைய தெள்ளியவெண், முத்த மளக்குந் திருப்போரூர் மூர் த்தி வருக வருகவே-முதல்வா சமர புரிவாழும் முரு கா வருக வருகவே. (ச)

கந்தா வருக புனக்குறத்தி காந்தா வருகப் பன் னிரண்டு-கையா வருக கனக தண்டைக் காலா வருக வாலையருள், மைந்தா வருக நந்தாத வாழ்வே வருக தாழ்வில்சிந்தா-மணியே-வருகப் பிணிதீர்க்கும் மரு ந்தே வருக மந்தியுந்தித், திந்தா வெனக்கை யாற்பல வின் செழுங்கா யெனுமத் தளமுழக்கத்.தேமாங்குயி லொத் திசைப்ப வண்டு செழும பண்பாட மயிலா டும், முந்தா டரங்காஞ் சோலைமலை மூர்த்தி வருக வருகவே-முதல்வா சமர புரிவாழும் முருகா வருக வருகவே. (ரு)

வன்பேய் பில்லி சூனியங்கள் வலிய கொடிய நோய்களினுல்-வருந்து மெவரும் நினதுபெயர் வழுத்திற் றுயரம் பறந்தரிய, இன்பே அடைவரெனவழி ஞ ரிசைக்கக் கேட்டிங் கெனைச்சார்ந்தோர்க்-கிருக் குங் கொடிய பலபிணிக ளிடையூ றுகும் பழவினை யின், துன்பே சகல வருள்புரியத் துதித்தேன் செந் தூர் சுகவரத-துரையே கிருபைக் கடற்பெருக்கே சொல்லற் கரிய மாதவர்கள், முன் ?ப வந்தா யது போலென் மூர்த்தி வருக வருகவே - முதல்வா சமர புரிவாழும் முருகா வருக வருகவே. (சு)

இனிக்குங் கரும்புந் துவர்க்க ரஞ்சித் திருக்கு மூனது திருப்புகழை-இருகா தாரக் கேட்டுருகா ரிய மன் பாசத் தயர்வரெனத், தொனிக்குஞ் சேவற் கொடிபடைத்த துரைவே வருககணபதிக்குத்-துணைவா வருக ஆதிபரஞ் சுடரே வருக சரவணத்திற், செனிக்கும் பால சுப்ரமண்ய தேவாவருக தேவருக்குஞ் சேவை கொடுக்குந் திருப்பழனி செவ்வேள் வருக தென்பொதிகை, முனிக்குங் குருவா யனுக்ரகித்த மூர்த்தி வருக வருகவே-முதல்வா சமர புரிவாழும் முருகா வருக வருகவே. (எ)

செப்பாந் தனமும் விழிவேலுஞ்செறியு மளக விருட்காடுஞ்-சிறக்கக் காட்டி மயக்குமின்னார் திறத்தின் மயலைக் கடந்தவர்கள், ஒப்பா யில்லா வொளி மணியே யுயர்வா மரிய விரத்தினமே - உள்ளே உள்ளக் கனிகனியே யோங்குஞ் சுவையே பசுந்தேனே, இப்பார் முழுதுந் தொழுதிற்கு மெழிலே பாகே கற்கண்டே-என்று வருந்தித் துதிக்கவவர்க் கெல்லா வருளுந் தந்தாளும், முப்பால் ஞான வருட்கருணை மூர்த்தி வருக வருகவே - முதல்வா சமரபுரிவாழும் முருகா வருக வருகவே. (அ)

பொருகார் முகத்தைப் பொருவுகரும் புருவப் பருவத் தெரிவையரைப்-புல்கத் திருத்திக்கலவையள் ளிப்பூசிப் பேசிக் கூசியவள், அருகா யிருந்துமடித்த சுருளருத்தி மடிமே லிருத்திமுலை-பதனை நெருடிப் பதம்வருடி யணைக் தந்தொழிலே நினைப்பதன்றி,ஒரு காலமுமுன் றனைப்பணிதற் குருகா மனவஞ் சகத்தனையும்-உன்னை ளெனக்கொண் டென்னாளு,முவந் தாய் வருகச்,சுகந்தமுந்த, முருகார் கடம்பத் தடம் புயத்து மூர்த்தி வருக வருகவே-முதல்வா சமர புரி வாழும் முருகா வருக வருகவே. (கூ)

வானாய் நீராய் வளியனலாய் மண்ணா யன்பரு யிர்க்குயிராய்-மறையாய் மறையின் பொருளாய்ச்சன் மார்க்க முடையார் மனதினுக்குள், தேனாய்ப்பாகாய்க் கரும்பாகித் தெவிட்டாக் கனியாய்த் தெள்ளமு தாய்த்-தித்தித் தவர்கள் கருத்தினிற்குஞ் செய்லக ளெவையுஞ் சித்திக்கத், தானாயருளுஞ் சற்குருவாய்த் தமரா யடியர் பகைஞருக்குச்-சமனாய்க் கருணைக்கொ ருமலைபாய்ச் சாற்றுந் திருவே ரகத்தில் வளர், மோனப் பரமற் குபதேச மூர்த்தி-வருக வருகவே-முதல் வா சமர புரிவாழும் முருகா வருக வருகவே. (௰)

திருப்போரூர்

சுப்பிரமணியர் வருகைப்பத்து

முற்றுப் பெற்றது.